முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் ஆண்டாள் அம்மையார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

22.01.2019, செவ்வாய்க்கிழமை

1. **வேலவா வெற்றிக்குமரா என**
   **வேண்டியே உலக மக்கள் வர**
   **காலனை வெல்லும் வரம் பெறுவர்**
   **கட்டுக்கோப்பான சமூகம் படைப்பர் என**
2. எனக் கூறி ஆறுமுக ஞானி கண்ட
   ஏழாம் படை வீட்டுக்கு வாரீர் என
   ஞானவழி காட்டி ஒளி சூட்சும நூலை
   ஞாலமதில் **விளம்பி கலை திங்கள்**
3. **திங்களிலே அட்டம திகதி குசன் வாரம்**
   **(விளம்பி வருடம் தை மாதம் 8ம் நாள் 22.01.2019, செவ்வாய்க்கிழமை)**
   **தேசிகனுக்கு ஆண்டாள் யானும்**
   ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
   ஓங்கார குடிலாம் அரங்க ஞானி வாழும்
4. வாழும் ஏழாம் படை வீடு தன்னில்
   வாழ்வாதாரம் மக்களுக்கு பெருக்கும்
   வாழும் ஞானி அரங்கன் வரமிருக்க
   வறுமை கொடுமை விரட்டும் தருமமிருக்க
5. தரும வடிவில் தண்டாயுதனும்
   தரணிக்கு அருளமுதாக்கி தரும்
   பெருமைமிகு சூட்சுமம் நடத்திட
   பெருஞ்சக்திகளாக ஞானியர் கூட்டங்கள்
6. கூட்டங்கள் சூழ்ந்து முக்காலமும்
   குடிலதனில் அருளாசி வழங்கி வர
   வாட்டம் போக்கும் சரவணஜோதி
   வைரமாய் வான ஒளியாய் பரவி இருக்க
7. இருக்கவே பல்வேறு பிறவிகளில்
   எல்லையிலா தவ தருமசக்தி கொண்ட
   கருத்தான தொண்டர்கள் இருக்க
   கனிவோடு ஆறுமுகன் தலைமைபட வாழும்
8. வாழும் ஞான சபைக்கு வந்து
   வணங்கி மக்கள் வருதல் காண
   பாழும் கரும வினையை வென்று
   பரிபக்குவம் சர்வபலமும் அடைவர்

9. அடையவே உயர் ஞான பலம்
அரங்கனை தொடர்ந்து வரஅடைவர்
தடைகளை வெல்லும் தருமபலம்
தவராசனுடன் இணைந்து அடைய

10. அடையவே அவரவர் விரும்புகின்ற
ஆனந்தமான வாழ்வும் நலமும்
சோடை போகா பதவி பலமும்
சுத்தநெறிபட ஞான ஆனந்தமும் அடைவர்

11. அடைவரே பிறவா பேற்றை
அடைவரே அரங்கன் வழி தேற்றம்
தடைபடா வாரீர் அரங்கமகானை நோக்கி
தன்னிலை உயருவதுடன் உலகை வெல்வர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் ஆண்டாள் அம்மையார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

முருகப்பெருமானின் அவதார ஞானி ஆறுமுக அரங்கமகானை முருகப்பெருமானாகவே மனதினுள் தியானித்து வேலவனே வெற்றிக்குமரனே உம்மை நாடினோம் நாங்கள் என்றே பயபக்தியுடன் ஆறுமுக ஞானி அரங்கன் படைத்திட்ட சக்திமிகு ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலை நாடி வந்து அரங்கதரிசனம் பெற்றிட்டால், தரிசனம் பெற்றவரெல்லாம் எமனையும் வெல்லும் மரணமிலாப் பெருவாழ்வு வரத்தினை பெறுவார்கள், பெற்றுமே ஞானம் பெருகிய கட்டுக்கோப்பான சமூகத்தினை படைத்திடுவார்கள். யுகமே மாற்றமடையும் எனக் கூறியே கலியுக மக்களே மரணமிலாப் பெருவாழ்வு பெற்றிடவே விரைந்து ஆறுமுக அரங்கனை நாடி வாரீர் என்றே உலகோர்க்கு ஞானம் அடைகின்ற வழியினை காட்டி சர்வல்லமைமிக்க அரங்கனே ஞானம் அளிக்கும் மகா ஞானி என்றே அரங்கன் பெருமை உரைத்து உலக நலம் கருதி உலகினில் முருகப்பெருமானின் ஆட்சி அமைந்திட இவ்வுலகம் ஞானம்மிக்க ஓங்கார உலகமாக அமைந்திடவே ஒளி சூட்சும நூல்தனையே **விளம்பி வருடம் தை மாதம் 8ம் நாள் 22.01.2019, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே ஆண்டாள் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் ஆண்டாள் அம்மையார்.

முருகப்பெருமானை தலைவனாகவும் வழிபடு தெய்வமாகவும் ஞானகுருவாகவும் முருகப்பெருமானே அவதரித்து ஆறுமுக ஞானியாக அமர்ந்தருள் புரியும் புண்ணிய ஞானபீடமான ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை முழுநம்பிக்கையுடன் நாடி வந்து அரங்கனை பயபக்தியுடன் வணங்கி ஆசி பெற்றால், ஆசி பெறுவோரின் வாழ்வாதாரம் பெருகிடும். அரங்கனிடம் வரம் பெற்றிட அரங்கன் அளித்த வரம் பெற்றவர்களின் வறுமை எனும் கொடுமையை விரட்டி ஓட்டும்.

ஏழாம் படை வீட்டிலே தருமம் செழித்தோங்கி தரும்பலம் குவிந்திருக்க அவதார ஞானி அரங்கனின் ஞானயோக தவபலம் இருக்க தர்மத்தின் வடிவினிலே முருகப்பெருமானே இவ்வுலகிற்கு உணவின் வழிதனிலே அருளாசிகளை உலகோர்க்கு வழங்கி நிற்க, இவையெல்லாம் சூட்சுமத்திலே பெருமைமிக்க செயலாக நடந்து கொண்டிருக்க சூட்சும வடிவினிலே குடிலினைச் சூழ்ந்து உலக மகா ஞானியர் கூட்டங்கள் முக்காலமும் சூழ்ந்து குடிலதனில் அருளாசிகளை அளவிலாது வழங்கி வருகின்றார்கள்.

அத்துடன் நில்லாது சர்வ வல்லமைமிக்க முருகப்பெருமானே நேரில் வெளிப்பட்டு அருள் செய்யும் அற்புதமான சரவணஜோதியும் அருட்பெருஞ்சுடராய் பிரகாசித்து வைரம் மின்னுவது போல ஒளி பொருந்தி வானஒளியாய் பரவி இருக்க இந்த தெய்வீக சூழலிலே பல்வேறு பிறவிகளிலே பல்வேறு ஞானிகளின் திருவடி பற்றி பூஜித்து தொண்டுகள் செய்து எல்லையில்லா தவதரும சக்திகளை கொண்டிட்ட திருக்கூட்ட மரபினரின் வழிவரும் தொண்டர் கூட்டமும் இருக்க கருணையே வடிவான தாயினும் மேலான தயாபரன் முருகப்பெருமானின் தலைமையில் வாழ்கின்ற ஞானசபையாம் ஓங்காரக்குடிலிற்கு வந்து பயபக்தி பணிவுடன் உள்ளன்போடு முழுநம்பிக்கை கொண்டு மக்கள் வணங்கி வந்தால் மனிதனை பாழும் பிறவித்துயரில் ஆழ்த்தி துன்பப்படுத்தும் கருமவினைகளை வென்று பரிபக்குவமும் சர்வபலமும் அடைந்து சிறப்படைவார்கள்.

அரங்கமகான் ஞானசபைக்கு வந்து அருளாசி பெற்றிட்டால் அவரெல்லாம் அரங்கமகானின் தயவால், கருணையால், அன்பால், உயர் ஞானபலம் பெற்று உத்தம மகா ஞானி அரங்கனின் ஞானவழிகளை ஒன்று தவறாமல் கடைப்பிடித்து அரங்கனை பின்தொடரும் வாய்ப்பினை பெறுவார்கள். அவர்கள் வாழ்வினில் வரும் தடைகளை உண்டாக்கும் வினைகளை வெல்லும் மகா சக்தியான தருமபலம்தனை அரங்கனின் தானதரும பணிகளுக்கு தொண்டுகள் செய்தும் பொருளுதவிகள் செய்தும் தவராசன் அரங்கனுடன் இணைந்து தர்மபலத்தினை அடைந்திட அவரவரும் விரும்புகின்ற வகையில் ஆனந்தமயமான வாழ்வும் நலங்களையும் பெற்று வீண் போகாத வகையில் குற்றமற்ற பதவி பலத்தினையும் சுத்தநெறிபட வாழ்ந்து ஞானானந்தம் அடைந்து சிறப்பார்கள்.

அவர்களெல்லாம் வாழ்வாங்கு வாழ்ந்து பிறவா பெரும்பேற்றை தடையின்றி அரங்கமகானின் மூலமாய் அரங்கனை தொடர்ந்து பின்சென்று அடைந்து ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்வார்கள்.

உலக மக்களே உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கனைக் காண உடன் விரைந்து வாரீர் வாரீர் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலிற்கு வந்துமே அரங்கனாசி பெற்று தன்னிலை உயர்ந்து உலகை வென்றிட வாரீர் வாரீர் அரங்கமகான் திருவடி பணிந்திட என அழைப்பு விடுக்கின்றார் மகான் ஆண்டாள் அம்மையார்.

–சுபம்–